17.11.2025

அ.வ.எண். 38/2021

பி.சா.1 ஏழுமலை குறுக்கு விசாரணை

1. தாவாசொத்து மங்கலம் கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். வாதி எந்த சர்வே எண்ணிற்கு எத்தனை அட்டவணை சொத்துகளுக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வெ எண்.293/1க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார், அவர் வழி வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். மங்கலம் கிராமத்தில் வாதிக்கு சொந்தமான புஞ்சை நிலம் உள்ளது என்றால் சரிதான். அதன் சர்வே எண்.176 ஆகும். அதன் விஸ்தீரணம் 5 ஏக்கர் 97 செண்ட் இருக்கும். மங்கலம் கிராமத்தில் எனக்கு நஞ்சை புஞ்சை நிலங்கள் உள்ளதா என்றால் என்னுடைய சொத்தைதான் வாதிக்கு விற்றுவிட்டேன், வேறு எந்த சொத்தும் என்னிடம் இல்லை. நான் விவசாயம் செய்து வருகிறேன். உத்திரமேரூர் சாலை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்கிறது என்றால் சரிதான்.

2. அந்த சாலைக்கு மேற்கு பக்கம் தான் தாவா பி அட்டவணை சொத்து உள்ளது. தாவா பி அட்டவணை சொத்திற்கு மேற்கேதான் நான் கிரையம் கொடுத்த தாவா எ அட்டவணை சொத்து உள்ளது என்றால் சரிதான். தாவா எ மற்றும் பி அட்டவணை சொத்திற்கு நான்கு புறமும் எனக்கு எந்த சொத்தும் கிடையாது என்றால் சரிதான்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)